நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 499 /2024

## D.W. 1 –ன் வாக்குமூலம்

**( எதிர்மனுதாரர் தரப்புசாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்தன்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | சந்திரமோகன் |
| கிராமம் | : | மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **DW 1** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.52PM

1. நான் தற்போது தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். இரண்டு நடப்பு கணக்குகள் தொடர்பாக விவரம் கேட்டு எனக்கு அழைப்பாணை அனுப்பபட்டிருந்தது.

2. எம்ஏ டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் நடப்பு கணக்கு எண். 36350300000786 மற்றும் எம்ஏ யுனிவர்ஸ் என்ற பெயரில் நடப்பு கணக்கு எண். 36353102000786 என்ற இரண்டு வங்கி கணக்குகளின் 01.06.2023ம் தேதியிலிருந்து 01.06.2024 தேதி வரையிலான வங்கி கணக்கு அறிக்கைகள் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (**மேற்படி எம்ஏ டிரான்ஸ்போர்ட் பெயரில் உள்ள வங்கி கணக்கு அறிக்கை எ.சா.ஆ 1 ஆகவும் எம்ஏ யுனிவர்ஸ் என்ற பெயரில் உள்ள வங்கி கணக்கு அறிக்கை எ.சா.ஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**
3. என்னிடம் காட்டப்படும் பு.சா 1 முதல் 3 வரையிலான காசோலைகள் எங்களது வங்கியில்தான் வசூலுக்காக செலுத்தப்பட்டது.மேற்படி 3 காசோலைகளையும் மா டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் உள்ள வங்கி கணக்கில் வசூலுக்காக செலுத்தியுள்ளனர்.மேற்படி 3 காசோலைகளும் 24.05.2024 ம் தேதி கணக்கில் போதிய பணம் இல்லாத காரணத்தினால் திருப்பபட்டது.
4. மேற்படி 3 காசோலைகளும் வசூலுக்கு செலுத்திய தேதிக்குள் 02.01.2024 ம் தேதி கார்த்திகேயன் என்பவரிடமிருந்து ரூ. 8,00,000/- வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நான் சொன்ன மா டிரான்ஸ்போர்ட் மற்றும் மா யுனிவர்ஸ் ஆகிய இரண்டு வங்கி கணக்குகளின் வாடிக்கையாளர் விவரம் அடங்கிய KYC ஆவணம் வேறு வேறு ஆகும்.

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. ஒரு தனிநபர்அல்லது ஒரு நிறுவனம் எத்தனை வங்கி கணக்குகள் வேண்டுமானாலும் வைத்துகொள்ளலாம் என்றால் சரிதான். பொதுவாக சிபில் ஸ்கோர் வைத்துதான் கடன்கொடுப்போம் என்றால் சரிதான். அந்த சிபில் ஸ்கோர் என்பது சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனம் மொத்தமாக அனைத்து வங்கிகளிலும், வைத்திருக்கும் கணக்குகளையும் கடன்களையும் வைத்து கணக்கீடு செய்வது என்றால் சரிதான்.
2. பொதுவாக திருப்பி கொடுக்கும் அளவிற்கு வருமானம் ஆதாரம் இருக்கும் நபர்களுக்கு அந்த விவரங்கள் சரிபார்க்கபட்டு அதன் பிறகுதான் கடன் வழங்கப்படும் என்றால் சரிதான்.
3. நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ 2 மா யுனிவர்ஸ் என்ற வங்கி கணக்கிலிருந்து

எதிரிக்கு ரூ. 5,00,000/- அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 02.06.2023 ம் தேதியில் மா டிரான்ஸ்போர்ட் என்ற வங்கி கணக்கிலிருந்து ரூ. 15,00,000/-எதிரிக்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு நிறுவனத்திற்கும் ஒரே உரிமையாளர் என்றால் இல்லை. மா டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் கல்யானி என்பவர் ஆவார். மா யுனிவர்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் முருகன் என்பவர் ஆவார்.

4. மேற்படி இருவரும் கணவன் மனைவி என்றால் சரிதான். இந்த வழக்கில் இரண்டு நபர்களுமே புகார்தாரர்கள் என்றால் சரிதான். பொதுவாக ஒரு காசோலை பணம் இல்லை என்று திருப்பபடுவதற்கு முன்பாக அந்த காசோலைகளில் உள்ள கையொப்பம் சம்பந்தப்பட்ட நபருடையதுதானா, அந்த நபர் சம்பந்தபட்ட வங்கியில் கணக்கு வைத்துள்ளாரா அந்த கணக்கு செயலில் உள்ளதா, மற்றும் அந்த காசோலைக்கு பணம் கொடுக்ககூடாது என்று ஸ்டாப்பேமெண்ட் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா உள்ளிட்ட விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர்தான் கணக்கில் போதிய பணம் உள்ளதா என்று பரிசீலனை செய்யப்படும் என்றால் சரிதான்.
5. அந்த முறையில் தான் இந்த வழக்கு காசோலைகள் திருப்பப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-03.22PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/- நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 499 /2024**

**D.W. 2 –ன் வாக்குமூலம்**

**(எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவசெல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | இசக்கி |
| கிராமம் | : | மதுரை |
| வட்டம் | : | மதுரை |
| மாவட்டம் | : | மதுரை |
| சாட்சி வரிசை எண் | : | **DW2** |
| வயது | : | 41 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.24 PM.

1. நான் தற்போது டாடாகேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் சட்ட மேலாளராக மதுரையில் பணிபுரிந்து வருகிறேன் அழைப்பாணையின் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். TCHHL0482000010221778 என்ற கணக்கு எண் கொண்ட வீட்டு கடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு

வந்துள்ளேன். அந்த கடன் கணக்கு கல்யாணி மற்றும் முருகன் என்பவர் பெயரில் உள்ளது.

2. மேற்படி கடன் கணக்கு கார்த்திகேயன் என்பவர் பெயிரில் இருந்து மேற்படி இருவருக்கும் மாற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் கார்த்திகேயன் என்பவர் மேற்படி வீட்டு கடன் வாங்கி அதற்கான அடமான ஆவணம் எழுதி கொடுத்திருந்தார். அந்த கணக்கை மேற்படி கல்யாணி மற்றும் முருகன் இருவரும் அந்த கணக்கை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவ்வாறு மாற்றப்பட்ட பிறகு கார்த்திகேயனை பொறுத்து கடன் கணக்கு முடிக்கப்படும்.
3. மேற்படி கடன் மாற்றம் செய்யப்பட்டது குறித்து யாருக்கும் எங்களது நிறுவனத்தில் பணம் பரிமாற்றம் செய்யப்படாது. கடனை திருப்பி மட்டுமே செலுத்த முடியும். அதில் இருந்து தொகை பெற முடியாது. என்னிடம் உள்ள ஆவணங்களின் படி கல்யாணி மற்றும் முருகன் ஆகிய இருவரும் தனிப்பட்ட முறையில்தான் கடன் வாங்கியுள்ளார்கள். நிறுவன பெயரில் எங்களிடம் கடன் வாங்கவில்லை.
4. கார்த்திகேயன் என்பவர் பெயரில் டாடா கேப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்தில் கணக்கு எண். TCFLA0482000011492539 கொண்ட கணக்கின் முடிக்கப்பட்ட கணக்கு அறிக்கையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது எ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
5. கல்யாணி என்பவர் பெயரில் டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் கணக்கு எண். TCHHL0482000100221778 கொண்ட கணக்கின் முடிக்கப்பட்ட கணக்கு அறிக்கையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது எ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. மேற்படி கல்யாணி என்பவர் பெயரில் டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் மற்றொரு கணக்கு எண். TCHIN0482000100222126 கொண்ட கணக்கின் முடிக்கப்பட்ட கணக்கு அறிக்கையின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது எ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கணக்கு மேற்படி கடனுக்கான காப்பீடு தொகைக்காக நிர்வகிக்கப்படுவது ஆகும்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பொதுவாக எங்களது நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்ட கடன் நிலுவையில்

இருக்கும்போது அந்த சொத்தின் உரிமையாளர் மற்ற ஒரு நபருக்கு அந்த சொத்தை விற்று வாங்கிய நபருக்கு கணக்கு பரிமாற்றம் செய்யப்படும்போது புதியதாக சொத்தை பெறும் நபர் நிதி நிலைமை பொறியாளர் மதிப்பீடு ஆகியவற்றை கணக்கில் வைத்து புதியதாக வாங்கும் நபர்களுக்கு கடன் வழங்குவோம். அதில் ஏற்கனவே கடன் கணக்கு வைத்துள்ள நபர் செலுத்த வேண்டிய தொகையை கழித்துவிட்டு மீதமுள்ள தொகையை புதியதாக கடன் வாங்கும் நபருக்கு அனுப்பி வைப்போம்.

2. இந்த வழக்கில் கார்த்திகேயன் மேற்படி கடன் மாற்றப்படும் செய்யப்படும் 12.07.2023 ம் தேதியில் ரூ.92,54,436/- எங்களுக்கு வர வேண்டிய பாக்கி இருந்தது. அந்த பரிவர்த்தனையில் இந்த வழக்கின் புகார்தாரர்களான கல்யாணி மறறும் முருகனுக்கு ரூ. 1,12,50,000/- கடன் அனுமதிக்கப்பட்டது. அந்த கடனில் பேரில் மேற்படி கார்த்திகேயன் பெயரில் உள்ள சொத்தின் அடிப்படையில்தான் மேற்படி ரூ. 1,12,50,000 க்கு கடன் வழங்கப்பட்டது. அந்த சொத்துக்களை கார்த்திகேயன் மேற்படி கல்யாணி மற்றும் முருகனுக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்.

3. அந்த கடனில் அடிப்படையில் கல்யாணியின் வங்கி கணக்குக்கு ரூ. 1,12,50,000/-த்தை 3 தவணைகளாக கடந்த 28.06.2023 ம் தேதியில் முதல் தவணையாக ரூ.67,60,000/-மும், அதே தேதியில் இரண்டு தவணையாக ரூ. 24,85,729/-ரூபாயும், அதே தேதியில் 3 வது தவணையாக ரூ. 20,04,271/- ரூபாயும்அனுப்பப்பட்டது. மேற்படி தொகையில் 3 வது தவணை மட்டும் கணேசன் என்பவர் பெயரிலான HDFC வங்கி கணக்கிற்கு அனுப்பபட்டது. மற்ற இரண்டு தவணைகளும் கல்யாணி என்ற வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது. கார்த்திகேயன் என்பவருக்கு இந்த பரிவர்த்தனையில் பணம் எதுவும் அனுப்படவில்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ 3 ஆவணத்தில் 9 வது பக்கத்தில் 4 பரிவர்த்தனைகள் மூலம் கார்த்திகேயன் எங்களது நிறுவனத்திற்கு எங்களது நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தொகைகள் செலுத்தப்பட்டுள்ளது. அதில் 3 பரிவர்த்தனைகள் காசோலைகள் மூலமாகவும், ஒரு பரிவர்த்தனை NEFT மூலமாக செய்யப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பாக எந்த கணக்கிலிருந்து மேற்படி தொகை

செலுத்தப்பட்டுள்ளது என்று என்னால் சொல்ல முடியாது. ( **மேற்படி பரிவர்த்தனைகள் அடங்கிய பகுதி பு.சா.ஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. இந்த வழக்கின் தரப்பிற்னருக்கிடேயான வரவு செலவு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த பரிவர்த்தனை நடைபெற்றபோது எங்களது நிறுவனத்தில் இருந்த இந்த கடன் வழங்கிய சம்பந்தபட்ட அலுவலர்களை விவரம் கேட்டு நான் சாட்சியம் அளிக்கவில்லை.
6. இந்த வழக்கின் எதிரி கார்த்திகேயன் டாடா கேப்பிடல் பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட் நிறுவனத்தில்தான் கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்த எ.சா.ஆ.3 ஆவணத்தில் டாடா கேப்பிடல் லிமிடெட் நிறுவனம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு பெயர்களும் ஒரே நிறுவனத்தை தான் குறிக்கும்.
7. புகார்தாரர்கள் கடன் வாங்கியது டாடா கேப்பிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் தான் என்றால் சரிதான். மேற்படி டாடா கேப்பிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் கடன் வாங்கி தான் டாடா கேப்பிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர்கள் பெற்றுக்கொண்ட மொத்த கடன் தொகை ரூ.1,12,50,000/- என்றால் சரிதான். அதுபோக ரூ. 5 இலட்சம் மேற்படி கடன் தொகைக்கான காப்பீட்டுக்காக தனியாக வழங்கப்பட்டது.
8. மேற்படி கணேசன் என்பவர் பெயருக்கு அனுப்பபட்ட தொகையை கார்த்திகேயன் என்பவர்தான் பெற்றுக்கொண்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கணேசன் என்பவருக்கு எந்த வகையில் பணம் அனுப்பபட்டது என்பதற்கான விவரம் நான் கொண்டுவந்த ஆவணத்தில் இல்லை.
9. புகார்தாரர்களின் ஒப்புதலின் பேரில் மேற்படி கணேசன் என்பவருக்கு பணம் அனுப்பபடவில்லை என்றால் சரியல்ல. கார்த்திகேயன் தரப்பில் எங்களது நிறுவனத்திலிருந்து வீட்டை அடமானம் வைத்து கடன் மட்டும்தான் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். புகார்தாரர் தரப்பில் வீடு வாங்குவதற்காகதான் வீட்டு கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான்.

10. பொதுவாக ஒரு கடன் தொகை வாங்கும்போது வீடு விற்பவருக்கு கடன்தொகை போகுமா, வீடு வாங்குபவருக்கு கடன்தொகை போகுமா என்றால் விற்பவர் செலுத்த வேண்டிய கடனை கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகை விற்பவரை சென்றடையும்.

**மறுவிசாரணைக்கு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

1. ஏற்கனவே ஒரு நபர் எங்களது நிறுவனத்தில் வீடு அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தால் அந்த வீட்டை பொறுத்து கடனை மாற்றி கொடுத்து வேறொரு நபருக்கு விற்பனை செய்ய Purchase Agreement போடுவோம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் கடன் வழங்கப்படும். அந்த கடன் வழங்குவதற்கு முன்பாக ஏற்கனவே கடன் வாங்கியிருந்த நபரின் கடன் கணக்கை பணத்தை முழுவதுமாக வசூல்செய்துக்கொண்டு அதன்பிறகுதான் புதியதாக வீடு வாங்கும் நபருக்கு கடன் வழங்குவோம்.
2. பழைய கடன் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு புதிய கடன் ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். இரண்டாவதாக கொடுக்கப்படும் கடன் தொகை இரண்டாவதாக கடன் வழங்கும் நபரின் கணக்கிற்கு தான் செல்லும் வேறு யார் கணக்கிற்கும் செல்லாது. கடன் வழங்கியதும் சம்மந்தப்பட்ட நபரின் வங்கி கணக்கிற்கு பணம் சென்றுவிடும்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்மந்தமான purchase Agreement ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அது எனது நிறுவனத்தில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. பொதுவாக கடனுக்கு விண்ணப்பித்த பிறகு 10–15 நாட்கள் கழித்துதான் கடன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நிறுவனமும் டாடா கேப்பிடல் என்ற முதன்மை நிறுவனத்தின் துணை நிறுவனங்கள் ஆகும்.
2. இரண்டு நிறுவனத்திற்குள் அலுவல் முறைப்படி காசோலை உள்ளிட்ட பணபரிவர்த்தனை செய்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். உண்மையில் வாங்கிய கடன் தொகை முழுவதும் எதிரி கார்த்திகேயன் வங்கி கணக்கிற்குதான் செலுத்தப்பட்டது என்றாலும், புகார்தாரர் வங்கி கணக்கிற்கு எந்த தொகையும் அனுப்பபடவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–05.05PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**